பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 143 நாள் : 31.10.2016

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில்</u>**

**<u>விளம்பர பலகைகள் நிறுவ மற்றும் உரிமம் புதுப்பிக்க</u>**

**<u>துணை ஆணையர் (வ (ம) நி) அவர்களுக்கு முறையாக விண்ணப்பிக்கலாம்</u>**

------

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்: 112 மற்றும் 113, நாள்: 30.08.2016 நாளிட்ட ஆணையின்படி, விளம்பர பலகைகள் அமைக்க மற்றும் புதுப்பிக்க உரிமம் வழங்குதல், டிஜிட்டல் பேனர்கள், பிளாக்கார்ட்1 அமைக்க அனுமதி வழங்குதல் அதிகாரம் சென்னை மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

விளம்பர பலகைகள் கோரி பெறப்படும் மனுக்கள் மீது விரைந்து முடிவெடுக்க, பெருநகர சென்னை மாநகராட்சி பொறியாளர்கள் மற்றும் போக்குவரத்து காவல்துறை உதவி ஆணையாளர் உள்ளிட்ட ஒற்றை சாளர தீர்வு முறை (Single Window Clearance System) அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, ‘‘அரசாணை எண்: 112 மற்றும் 113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 30.08.2016ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விளம்பர பலகைகள் நிறுவ மற்றும் உரிமம் புதுப்பிக்க துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்களுக்கு முறையாக விண்ணப்பிக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது’’.

செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்
பெருநகர சென்னை மாநகராட்சி